தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-4-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஏப்ரல் 2013 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

ஏப்ரல் 2013 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து இப்பல்கலைக்கழக பயிர்ப்பாதுகாப்பு மையத்தின் அறிக்கை பின்வருமாறு:

**நெல்**

தர்மபுரி, கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நெற்பயிரில் இலைச் சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விளக்குப் பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்.

பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீத கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம். மேலும் தேவைப்படின் புரோபினோபாஸ் 50 இசி 400 மி.லி. அல்லது குளோர்பைரிஃபாஸ் 20 இசி 500 மி.லி. ஓர் ஏக்கருக்குத் தெளிக்கவும்.

**நிலக்கடலை**

கோயம்புத்தூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் நிலக்கடலைப் பயிரில் இலைச் சுருட்டுப்புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த விளக்குப்பொறிகளை வைத்து அந்திப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் தயாரித்துத் தெளிக்க வேண்டும்.

**கரும்பு**

கரூர், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கரும்பில் இடைக் கணுப்புழுக்களின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சி.சி. என்றளவில் 15 நாட்கள் இடைவெளியில் 5-6 முறை விட வேண்டும்.

**பருத்தி**

திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பருத்திச் செடியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை மஞ்சள் நிற ஒட்டும் பொறியை வைத்துக் கண்காணிக்க வேண்டும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தயாரித்து பயிர்களில் தெளிக்கலாம்.

**சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கான முக்கிய அறிவிப்பு**

தமிழ்நாட்டில் தொடர்ந்து வறண்ட வானிலை தென்படுவதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளான பப்பாளி மாவுப்பூச்சி, சுருள் வெள்ளை ஈயின் தாக்குதல் விவசாய மற்றும் காய்கறிப் பயிர்களில் அதிகமாகத் தென்பட வாய்ப்புள்ளது மற்றும் பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது.

பப்பாளி மாவுப்பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த விவசாயிகள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகக் கல்லூரிகள் / ஆராய்ச்சி நிலையங்கள் / வேளாண் அறிவியல் நிலையங்களில் இலவசமாகக் கிடைக்கும் ஒட்டுண்ணிகளை வாங்கி உபயோகிக்கவும்.

மேலும் இதர சாறு உறிஞ்சும் பூச்சிகளின் சேதத்தை குறைக்க வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் அல்லது கடைகளில் கிடைக்கும் வேம்பு சார்ந்த மருந்துகளை வாங்கி பயிர்களில் தெளிக்கவும்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்